கல்குடா கல்வி வலய வனநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (உ/த) – 2018 ஆனி

தரம்: 13 (2018)	தவணை: 06	உயிர்முறைமைகள் தொழில் நுட்பம் -I	நேரம்: 2மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

உயிர்முறைமைகள் தொழில் நுட்பம் -I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. உயிர் முறைமைகள் தொழில் நுட்பத்தின் எதிர்கால செல்நெறியாவது?
   1. மூடப்பட்ட முடுக்கி கொண்ட மையநீக்க விசைப் பம்பியைப் பயன்படுத்தல்
   2. அங்கிகளின் வாழ்க்கைக்குத் தேவையான சாதகமான சூழலைப் பேணுதல்
   3. பலவாளிச் சூத்திரத்தை இயந்திர வலுவால் இயக்குதல்
   4. நெல்லினைத் தூற்றுவதற்கு புதிய இயந்திரங்களை வடிவமைத்தல்
   5. முசல வகைப் பம்பியினை தொடர்ச்சியாக நீரை வெளியேற்றக் கூடிய வகையில் மேம்படுத்தல்

2. கிழங்குப் பயிர்களில் முகிழின் தரத்தை தீர்மானிக்கும் பிரதான காரணி எது ?
   1. சாரீரப்பதன்
   2. மழைவீழ்ச்சி
   3. வெப்பநிலை
   4. ஒளிக்கால அளவு
   5. ஒளிச்செறிவு

3. இலங்கைக்கு தென் மேல் பருவப் பெயர்ச்சி மழை கிடைக்கும் காலப்பகுதி
   1. மார்ச் - மே
   2. மே - செப்ரெம்பர்
   3. செம்ரெம்பர் - டிசம்பர்
   4. டிசம்பர் - மார்ச்
   5. நவம்பர் - பெப்ரவரி

4. பின்வரும் மண் மாதிரிகளில் நீர் ஊடுருவல் அதிகமாக இருப்பது எது ?
   1. மணல் 20%, அடையல் 40%, களி 40%
   2. மணல் 70%, அடையல் 20%, களி 10%
   3. மணல் 30% , அடையல் 30%, களி 40%
   4. மணல் 25%, அடையல் 45%, களி 30%
   5. மணல் 20%, அடையல் 20%, களி 60%

5. மண்ணின் இயல்புகளை பிரதானமாக தீர்மானிப்பது எது ?
   1. மண் அங்கிகள்
   2. மண்ணீர்
   3. மண் கனிப்பொருள்
   4. மண் சேதனப் பொருட்கள்
   5. மண் வளி

6. மண்ணின் அடர்த்தி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - மண்ணின் தோற்ற அடர்த்தி அதிகம் எனில் மண் இறுக்கமடைந்துள்ளது.

www.lkedu.lk

B - மண்ணின் தோற்ற அடர்த்தி அதிகம் எனில் மண் நீர் கொள்ளளவு உயர்வு.

C - குறித்த ஓர் இடத்தில் மண்ணின் தோற்ற அடர்த்தி மாறுபடாது எனினும் உண்மை அடர்த்தி மாறுபடும்.

D - வெவ்வேறு பிரதேசங்களில் மண்ணின் உண்மை அடர்த்தி வேறுபடும் எனினும் வேறுபடும் வீச்சு 2.3 - 2.8 ஆக காணப்படும்.

தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

1. A, B மட்டும் 2. B, D மட்டும் 3. B, C, D மட்டும் 4. A, D மட்டும் 5. A, C, D மட்டும்

7. மாணவர்களால் இரு புள்ளிகளுக்கிடையிலான தூரத்தை அளவிடும் சந்தர்ப்பத்தில் Rear tapeman புள்ளி மீது 20m அடையாளத்தில் பிடிக்கும் போது Head tape man முதலாவது மீற்றரினுள் 0. 648 m என வாசித்தான். எனின் இரு புள்ளிகளுக்கிடையிலான தூரம் யாது?
   1. 20. 648 m
   2. 19. 352 m
   3. 19. 648 m
   4. 20 m
   5. 19m

8. உபகரணத்தில் நேர் வரிசையாக்கல் வழு உள்ளதா என சோதிப்பதற்காக மேற்கொள்ளப்படுவது?
   1. அளக்கும் நாடா
   2. அளக்கும் சில்லு
   3. இரு முனைச்சோதனை
   4. நீர் மட்டம்
   5. நவீன தியோடலைட்டு

9. தன்னியக்க மட்டமானி பற்றிய கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன.

A: தன்னியக்க மட்டமானி மூலம் உயரத்தை அளவீடு செய்ய முடியாது.

B: தன்னியக்க மட்டமானி மூலம் கோணத்தை அளவிடலாம்.

C: தன்னியக்க மட்டமானி மூலம் தூரத்தை அளவீடு செய்ய முடியும்.

மேற்கூறிய கூற்றுக்களில் சரியானது/ சரியானவை

1. A மட்டும் 2. B மட்டும் 3. A, B மட்டும் 4. B, C மட்டும் 5. A, B, Cஆகியன.

10. பின்வரும் தாவரத் தொகுதிகளில் இலைத்துண்டம் மூலம் இனம் பெருகும் தாவரத் தொகுதி எது?
   1. சதைகரைச்சான், பெகோணியா, ஆபிரிக்கன் வயலற்
   2. சதைகரைச்சான், ஆபிரிக்கன் வயலற், ஓக்கிட்
   3. சதைகரைச்சான், பெகோணியா, ஓக்கிட்
   4. சதைகரைச்சான், பெகோணியா, கோழியாஸ்
   5. சதைகரைச்சான், பெப்பரோமியா, ஓக்கிட்

11. நுண் இனப்பெருக்கத்தின் போது அரும்புகளின் விருத்திக்கும், வேர் விடுவதற்கும் பயன்படுத்தப்படும் ஊடகங்கள் முறையே.?
   1. ஒட்சின், ஜிபரலிக்கமிலம்
   2. சைற்றோகைனின், ஒட்சின்
   3. எதிலீன், ஒட்சின்
   4. ஒட்சின், சைற்றோகைனின்
   5. ஜிபரலிக்கமிலம், அப்சிசிக்கமிலம்

12. சிறப்பான விவசாய நடைமுறைகள் முகாமைத்துவத் தொகுதியில் தரம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படும் ஓர் சந்தர்ப்பம் எது ?
   1) பயிர்ச்செய்கைக்கென நிலத்தை தெரிவு செய்தல்.
   2) இயந்திரங்கள் உரிய இடத்தில் வைக்கப்பட்டிருத்தல்.

www.ked.lk

3) இயந்திரங்கள் கறையில் உருக்கினால் ஆக்கப்பட்டிருத்தல்.
4) தகவல்களையும் அறிக்கைகளையும் பேணுதல்..
5) சுத்தமான இடத்தில் தொழிற்சாலை அமைக்கப்பட்டிருத்தல்.

13. பல்படைப் பொதியிடலில் (Tetra pack) அலுமினியத்தாள் பயன்படுத்துவதன் நோக்கம்?
1. உணவை பொருத்தமான முறையில் பேணுதல்.
2. ஒட்சிசன், சூரிய ஒளி போன்றவற்றிற்கு தடையாக இருக்கும் அதேவேளை வாயுக்களால் பக்கப்புற நசுங்குதலில் இருந்து பாதுகாப்பு.
3. உணவுப் பொருளுக்கு வலுவை வழங்குதல்.
4. வெளிப்புறமான நீராவி போன்றவற்றிலிருந்து கொள்கலனையும் உணவையும் பாதுகாத்தல்.
5. வெப்பத்திற்கு ஈடுகொடுக்கின்றமை.

14. பழங்கள், காய்கறிகளின் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைத்தல் தொடர்பான சரியான கூற்று எது?
1. பொதியிடுவதற்கு பிளாஸ்டிக் பொதி, வாயு நிரம்பிய பொதி போன்றவற்றை பயன்படுத்தல்.
2. புத்தம் புதுத் தன்மையை பாதுகாக்க பொருத்தமான வெப்பநிலை, ஈரப்பதன் போன்றவற்றை ஆளுகை செய்தல்.
3. குளிர்ச்சிச் சங்கிலி வழியே சரியாகக் கையாளுதல்.
4. இழப்புக்களை தவிர்ப்பதற்கு புதிய பயிர் பேதங்களை விருத்தி செய்தல்
5. மேற்கூறிய யாவும் சரியானது

15. படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தைப் பயன்படுத்தி துணியப்படுவது



1. பழங்களின் மென்மைத்தன்மை
2. பழங்களின P^H
3. பழங்களின் கரையக்கூடிய திண்மப் பதார்த்தம்
4. பழங்களின் அமிலத்தன்மை
5. பழங்களின் தடிப்பு

16. புதிய வணிக முயற்சி ஒன்றினை ஆரம்பிப்பதற்கு முன்னதாக முயற்சியாளன் SWOT பகுப்பாய்வை மேற்கொள்ள வேண்டியதன் நோக்கம் யாது ?
1. நிதி மூலங்களை இனங்காண்பதற்கு
2. வெற்றிக்கான தடைகளை இனங்காண்பதற்கு
3. வெற்றிக்கான சாத்தியங்களை இனங்காண்பதற்கு
4. எதிர்பார்க்கும் விற்பனை அளவை கணிப்பதற்கு
5. நுகர்வோர் போக்குகளை அறிவதற்கு

17. பிழையான கொண்ணிலையினை நீண்டகாலம் பயன்படுத்தியதன் காரணமாக முகாமையாளர் ஒருவர் முள்ளந்தண்டு வலியினால் அவதியுற்றார். இந்த நிலையை மிகச் சரியாக குறிப்பிட முடிவது?
1) உழைப்புசார் இடர்
2) பௌதிக இடர்
3) இரசாயன இடர்
4) உயிரியல் இடர்
5) உளச்சமூக இடர்

www.lkedu.lk

18. இலங்கையின் சக்தி வலு உற்பத்தி தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?
    1) இலங்கையில் பிரதானமாக சூரிய சக்தியிலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது.
    2) சுற்றாடல் மாசுறுதலை கருத்திற் கொண்டு கனிய எண்ணெய் மூலம் மின் உற்பத்தி நடைபெறுவதில்லை.
    3) இலங்கையின் மின் சக்திக்கான கேள்வி கணிசமான அளவு குறைந்துள்ளது.
    4) நிலக்கரி மூலம் மின் உற்பத்தி செய்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றது.
    5) சக்திவலு நெருக்கடிக்கு அரசியல் தலையீடுகள் காரணமாக அமைவதில்லை.


19. உயிர்த்திணிவு எரிபொருள்களின் பிரதான இயல்பாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
    1) மீளப் புதுப்பிக்க முடியாதனவாகக் காணப்படல்
    2) எப்போதும் அசேதனத் தோற்றுவாயைக் கொண்டிருத்தல்
    3) குறைவான புவியியற் பரம்பலைக் கொண்டிருத்தல்
    4) உயிர்ச்சுவட்டு எரிபொருளை விட அதிகளவான மாசாக்கிகளை வெளிவிடல்
    5) வளிமண்டல CO_2 இன் அளவின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்யாமை

20. உணவுப் பொருட்களில் உள்ள கொழுப்பின் அளவை துணிவதற்காக பயன்படும் மிகச் செம்மையான முறை?
    1. Soxhlet பிரித்தெடுப்பு முறை
    2. சாயப்பினைப்பு முறை
    3. சூடான் 111 முறை
    4. Kjeldhal முறை
    5. Lane and Eynan முறை

21. உணவு உற்பத்திப் பொருளொன்றின் புலனுணர்வு மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்ட கூற்று பின்வருவனவற்றுள் எது ?
    1. உணவு உற்பத்திப் பொருளின் விலையை கட்டுப்படுத்தலாம்
    2. போசணைப் பெறுமானத்தை மேம்படுத்தலாம்
    3. உற்பத்திச் செலவை குறைக்கலாம்
    4. உற்பத்திப் பொருளின் பதப்படுத்தல் நிலைமைகளை விருத்தி செய்யலாம்
    5. மூலப்பொருளின் தரத்தை உறுதிப்படுத்தலாம்

22. செயற்பாட்டு விரியலாக்கியின் சிறப்பியல்பு அல்லாதது ?
    1. புறக்கணிக்கத்தக்க அளவு சிறிய ஓட்டத்தைப் பெறலாம்
    2. பயப்பிலிருந்து கூடுதலான ஓட்டத்தைப் பெறலாம்
    3. நேர்/ ஆடல் வோல்ட்டளவை விரியலாக்கலாம்
    4. சிறிய மீடிறன் வீச்சை விருத்தி செய்யலாம்
    5. வோல்டளவுகளை ஒப்பிடலாம்


23.



படத்தில் காட்டப்பட்டுள்ள குறியீட்டினால் காட்டப்படும் இலத்திரனியல் கூறு ?
    1. மூவாயி
    2. இருவாயி
    3. கொள்ளளவி
    4. மின்கலம்
    5. உணரி

www.ikedu.lk

24.



1. மின்சுற்றில் காட்டப்பட்டுள்ள தடையி R இன் தொழிற்பாடாக அமைவது?
1. மின்னேற்றத்தை சேமித்தல்
2. வோல்டளவை உருவாக்குதல்
3. சமிக்சை விரியலாக்கியாக தொழிற்படல்
4. காந்தப்புலத்தை உருவாக்குதல்
5. மின்னழுத்தத்தை பிரிப்புச் செய்தல்.

25. கழிவு நீர் பரிகரிப்பின் மூன்றாம் நிலை சுத்திகரிப்பின் போது நடைபெறுவது?
1. உயிரற்ற பக்டீரியா மண்டியை படிய இடமளித்தல்
2. படியச் செய்தல்
3. திரளச் செய்தல்
4. சமமாக்குதல்
5. சிறிய திண்மப் பதார்த்தங்களை அகற்றுதல்

26. கரட்டுத் திரள்களாக பயன்படுத்தப்படும் பதார்த்தம் எது ?
1. மணல்
2. ஆற்று மணல்
3. நீர்
4. சீமெந்து
5. ½ சிறிய கருங்கல் துண்டுகள்

27. புற்களை ஒரே உயரத்தில் கத்தரிக்க பயன்படும் உபகரணம் எது ?
1. வலு சங்கிலி அரிவாள்
2. புல் கத்தரிக்கும் இயந்திரம்
3. கையால் கத்தரிக்கும் வாள்
4. பிறை சந்திர நறுக்கி
5. புல் கத்தரிப்பான்

28. தரையலங்கரிப்புத் தொடர்பாக பின்வரும் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளது
A. தரையலங்கரிப்பு நிலத்தின் பெறுமதியை அதிகரிக்கும் உத்தியாக காணப்படுகிறது.
B. உள நெருக்கடிகளைக் குறைக்கும் ஆற்றல் உள்ளதாக தரையலங்கரிப்பு உள்ளது
C. நவீன வாழ்க்கை முறையின் ஓர் அம்சமாக தற்காலத்தில் தரையலங்கரிப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சரியானது / சரியானவை ?
1. A, B சரி 2. B, C சரி 3. A, C சரி 4. A, B, C சரி 5. A,B, C பிழை

29. பீடைகளின் விருத்திப் பருவங்களினுள் கட்டுப்படுத்த மிகவும் இலகுவான பருவம்

1) நிறையுடலி 2) முட்டை 3) அணங்கு 4) குடம்பி 5) கூட்டுப்புழு

30. ஒளியினால் கவரப்படாத மிகச்சிறிய பூச்சிகளை கட்டுப்படுத்தும் சூழல் நேயமான முறை எது?
1) ஒளி பொறியைப் பயன்படுத்தல்
2) கிறிஸ் பூசப்பட்ட தட்டைப் பயன்படுத்தல்
3) பெரோமோன் பொறியினைப் பயன்படுத்தல்
4) சிறிய வலைகளினைப் பயன்படுத்தல்
5) மின்சாரப் பொறிகளினைப் பயன்படுத்தல்

www.ikedu.lk

31. பீடை கட்டுப்பாடு தொடர்பான கூற்றுக்கள் வருமாறு.

A. பயிராக்கவியல் பீடைக்கட்டுப்பாட்டு முறைகளில் பயிர்ச்சுழற்சியும் ஒன்றாகும்

B. ஓராண்டு களைகளைக் கட்டுப்படுத்த உகந்த அதிக வினைத்திறன் கொண்ட முகாமைத்துவக் கோட்பாடு வித்துக்கள் உருவாகுவதைத் தடுத்தலாகும்.

C. பயிர் ஒன்றிலுள்ள பங்கசு நோயை கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட பூச்சி நாசினியை விசிறி கட்டுப்படுத்தலாம்.

இவற்றுள் சரியானது / சரியானவை ?

1. A, C 2. B, C 3. A, B 4. C 5. A, B, C

32. விந்துக்களினது மிகைக்குளிர் நிலைக்காப்பில் சேர்க்கப்படும் கிளிசரோலானது

1) விந்துகளுக்கு போசனையை வழங்கும்
2) விந்துகளுக்கு வழுவழுப்பு தன்மையை வழங்கும்
3) விந்துக்களின் இயங்கும் தன்மையைக்குறைக்கும்
4) விந்துகளுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும்
5) விந்துக்கள் நச்சுத்தன்மையினால் பாதிப்படைதலைத் தடுக்கும்

33. கருப்பை தொடர்பான தவறான கூற்று

1. இயற்கையான புணர்ச்சியின் போது சுக்கிலம் இங்கு விடுவிக்கப்படும்
2. கருப்பைக் கழுத்துக்கள் புணர்ச்சியின் போது திறந்து கொள்ளும்
3. கருப்பையினால் முளையம் போசிக்கப்படும்
4. கருப்பையினால் முளையத்திற்கு பாதுகாப்புக் கிடைக்கும்
5. கருப்பை மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டது.

34. பண்ணை விலங்குகளால் சூழலுக்கு விடுவிக்கப்படும் வாயுக்கள் தொடர்பான கூற்றுக்கள் வருமாறு

A. நீரில் கரைந்து காணப்படும் உயர் செறிவிலான NO_3^- களைக் கொண்ட நீரினை அருந்துவதன் மூலம் நீலக் குழந்தைகள் உருவாகும்.

B. NO_2, SO_2 வாயுக்கள் காரணமாக குருதிக் கலங்கள் தூண்டப்படும்

C. H_2S வாயுவை சுவாசிப்பதன் மூலம் Atherosclerosis நிலை உருவாகும்.

இவற்றுள் சரி / சரியானவை ?

1. A, B 2. A, C 3. B, C 4. C 5. A, B, C

35. இறைச்சியின் தரத்தை பரிசீலிப்பதற்கு மேற்கொள்ளப்படும் புலனுணர்வு மதிப்பீடு ?

1. வெப்பநிலை
2. நீர்ச் செயற்பாடு
3. சமநிலை ஈரப்பதன்
4. இழையமைப்பு
5. P^Hபெறுமானம்

36. சுற்றாடல்சார் உல்லாசப் பயணத் தொழிலினது பிரதான நோக்கம் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1) இயற்கைச் சூழல் தொகுதிகளில் ஏற்படும் பாதிப்புக்களை இழிவளவாக்குதல்.
2) பிரதேச ரீதியிலான கலாசார வழக்கங்களுக்கு மதிப்பளித்தல்.
3) சுதேசவாசிகளுடன் நட்புறவை ஏற்படுத்தாதிருத்தல்.
4) இயற்கை வளங்களையும் உயிர்ப் பல்வகைமையினையும் காப்புச் செய்தல்.
5) உல்லாசப் பயணிகளினதும் சுதேச வாசிகளினதும் சுற்றாடல் காப்பு தொடர்பான அறிவை மேம்படுத்தல்.

37. நுண்ணங்கிகளால் உணவுடன் சேர்க்கப்படும் நச்சுப்பொருட்கள்

1. அப்லோடொக்ஸின் , கிஸ்டமின்
2. பொட்டுலினம், கிஸ்டமின்

www.kesu.lk

3. பொட்டுலினம், அப்லோடொக்ஸின்
4. அப்லோடொக்ஸின், Diascorin
5. Diascorin, கிஸ்டமின்

38. வித்துகளுக்கு கப்ரான் தூள் சேர்ப்பதன் நோக்கம்
1) வித்துகளில் பூச்சித்தாக்கம் ஏற்படுவதை தடுத்தல்.
2) நாற்றுகளில் பங்கசு நோய்கள் ஏற்படுவதை தடுத்தல்.
3) நாற்றுகளுக்கு நுண்மூலகங்களை அளித்தல்.
4) நாற்றுமேடையில் களைகள் முளைப்பதைத் தவிர்த்தல்
5) வித்து முளைத்தலை துரிதப்படுத்தல்

39. ஆளுகையில்லங்களில் மகரந்தச் செயற்கையின் பின் பூக்களை மூடிக் கட்டுவதற்கான காரணம்?
1) பிற மகரந்த மணிகள் குறியை அடைவதை தடுப்பதற்கு
2) பூக்கள் உதிர்வதை தடுப்பதற்கு
3) பூக்களின் கேசரங்களை அகற்றுவதற்கு
4) தற்கருக்கட்டலை தூண்டுவதற்கு
5) வித்து உருவாக்கத்தை தடுப்பதற்கு

40. குறித்த பயிரொன்றின் நீர்த்தேவை 5.1cm நீர்ப்பாசன வினைத்திறன் 75% எனின் களத்திற்கு வழங்க வேண்டிய மொத்த நீர்ப்பாசன தேவை யாது?
1) 7.5cm 2) 6.8cm 3) 5.1cm 4) 3.9cm 5) 1.7cm

41. நான்கு சக்கர திராக்ரரில் முப்புள்ளி இணைப்பை இயக்குவது
1) நீரியல் தொகுதி
2) உராய்வு நீக்கி
3) வலு ஊடுகடத்தும் தொகுதி
4) எரிபொருட் தொகுதி
5) கியர்பெட்டி

42. காற்றுக்குரிய காரணிகள் அனைத்தையும் கட்டுப்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிருற்பத்திக்கான பண்ணைக் கட்டமைப்பு எது?
1) பொலித்தீன் கூடாரம்
2) வலை இல்லம்
3) மரச்சலாகை இல்லம்
4) கயிற்றினாலான இல்லம்
5) பசுமை இல்லம்

43. இயந்திரம் தொழிற்படும் சந்தர்ப்பத்தில் வால்வுகள் ஆளப்படுவது
1) பற்கொம்புத் தண்டு மூலம்
2) தொடுக்கும் கோல் மூலம்
3) உட் பாய்ச்சிப் பம்பி மூலம்
4) பறப்புச் சில்லு மூலம்
5) சுழற்றித் தண்டு மூலம்

44. தடாகத்தில் அமோனியாவின் அளவு அதிகரிப்பதற்கான காரணம்
1) உவர்த்தன்மையான நீரை நிரப்புவதனால்.
2) அதிக புரதம் கொண்ட உணவைத் தடாகத்துக்கு சேர்த்தல்.
3) நீர் வாழ் தாவரங்களின் அளவு குறைவடைதல்.
4) நைதரேற்றாக்கும் பற்றீரியாவின் அளவு குறைவடைதல்.
5) தடாகத்தில் அதிகளவு அல்காக்கள் பெருக்கமடைந்து காணப்படுதல்.

45. உலக மரபுரிமையாக குறிப்பிடப்படும் தேசிய மரபுரிமைக் காட்டு நிலம்
1) நக்கல்ஸ் 2) சிங்கராஜவனம் 3) யகிரல காடு 4) வில்லு 5) ஹபரண

www.lkedu.lk

46. இறப்பர் பாலில் காணப்படும் நொதியம் எது ?
    1. பப்பேன்
    2. ரெசின்
    3. ஒலியோரெசின்
    4. பொலிப் புறப்பீன்
    5. சுக்குரோஸ்

47. முசலவகைப் பம்பி
    1) வெவ்வேறு தேவைகளுக்கு ஏற்றவாறு பம்பிகள் உருவாக்கப்பட்டிருத்தல்
    2) இடத்துக்கிடம் எடுத்துச் சென்று நீரைப் பம்பக் கூடியதாகவிருத்தல்
    3) கழிவுகள் கொண்ட அசுத்த நீரையும் பம்பக் கூடியதாகவிருத்தல்
    4) குறைந்த இடப்பரப்பு போதுமானது
    5) வெளியேற்றப்படும் நீரின் அளவு சீராக காணப்படும்

48. ஊடுபுகவிடும் தன்மை குறைவான சீரான இழையமைப்பைக் கொண்ட ஆழம் குறைவான மண்ணை உடைய பயிர் நிலத்திற்கு பொருத்தமான நீர்ப்பாசன முறை
    1) வெள்ளப்படுத்தல்
    2) வரம்பு சால்
    3) மோதிர வடிவ நீர்ப்பாசனம்
    4) நிரல் நீர்ப்பாசனம்
    5) துளைகள் கொண்ட குழாய்

49. குறித்த பிரதேசத்திலுள்ள மிளகாய் செய்கை நிலத்தின் நாளாந்த ஆவியுயிர்ப்பு 3.0mm ஆகும். ஹெக்ரயரிலுள்ள மிளகாய்ப் பயிருக்கு தினசரி பிரயோகிப்பதற்குத் தேவையான நீர்ப்பாசன நீரின் இழிவளவான கனவளவு?
    1) 0.09 m^3 2) 0.90 m^3 3) 9.00 m^3 4) 90.00 m^3 5) 600.00 m^3

50. சால் நீர்ப்பாசனம் பொருத்தமாக அமைவது
    1) இருவாட்டிமண் கொண்ட குன்றும் குழியுமான நிலத்திற்காகும்.
    2) களிமண் அதிகம் கொண்ட சமதரையான நிலத்திற்காகும்
    3) மணல்மண் கொண்ட சமதரையான நிலத்திற்காகும்
    4) இருவாட்டிமண் கொண்ட சமதரையான நிலத்திற்காகும்
    5) மணல்மண் கொண்ட குன்றும் குழியுமான நிலத்திற்காகும்.

www.kedu.lk